

# கிருபையின் நினைவுச்சின்னங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோசுவா 3; எண் 14:44; லூக்கா 18:18–27; யோசுவா 4; யோவான் 14:26; எபி 4:8–11.

**மனன வசனம்:** பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கும், நீங்கள் சகல நாளும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும்படிக்கும், உங்கள் தேவனாகிய கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப்போகப்பண்ணினதுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப்போகப்பண்ணினார். யோசுவா 4:23,24.

காரில் சென்றுகொண்டிருந்த ஜானை காவல் அதிகாரி நிறுத்தி, ஓட்டுனர் உரிமத்தைக் காட்டும்படி கூறினார். அப்போதுதான், தன் பணப்பையுடன் உரிமத்தையும் அலுவலகத்திலேயே விட்டுவிட்டது நினைவுக்கு வந்தது. அதை எடுக்க மறந்துவிட்டதாக ஜான் விளக்கினார். உடனே ஜானிடம் அந்த அதிகாரி, அவர் என்ன வேலை செய்கிறாரெனக் கேட்டார். தான் பேராசிரியராக இருப்பதாக ஜான் சொன்னார். ஜானுக்கு அபராதம் விதித்த அதிகாரி, அதை அபராதமாக எண்ணவேண்டாமெனக் கூறினார்.

“இது படிப்புக்கட்டணம். பாடம் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் கட்டணம் செலுத்தவேண்டும். வண்டி ஓட்டும்போது உரிமத்தை மறக்கக்கூடாது என்பதற்கான படிப்புக்கட்டணம் இது. சென்று வாருங்கள், பேராசியரே!” என்று சொன்னார்.

எப்போதும் நம் கண்முன் இல்லாத விஷயங்களை மறப்பது மனித இயல்பு. உதாரணமாக, எடுக்கத் தவறின அலைபேசி அழைப்புகளுக்கும் மின்னஞ்சல்களுக்கும் பதிலளிக்க மறக்கிறோம். செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச மறக்கிறோம்; பிறந்தநாள் வாழ்த்துகள் சொல்ல மறக்கிறோம். ஆனாலும் ஆவிக்குரிய தேவைகளை மறப்பது அபராதத்தைவிட தீவிர விளைவுகளை உண்டாக்கும்; ஏனென்றால், அது நம் நித்திய முடிவு சம்பந்தப்பட்ட விஷயம்.

எபிரெயர்கள் யோர்தானைக் கடந்துசென்றதை ஆராய்ந்து, அவர்களது அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வோம்.

*2025, அக்டோபர் 18 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# யோர்தானைக் கடத்தல்

**யோர்தானைக் கடப்பதற்குமுன் மக்கள் விசேஷவிதத்தில் தங்களை ஆயப்படுத்து மாறு தேவன் இஸ்ரவேலரிடம் சொன்னது ஏன்? யோசுவா 3:1-5; எண் 14:41-44.**

யோசுவா புத்தகத்தில் உடன்படிக்கை பெட்டிபற்றி இங்குதான் முதன்முத லாக வருகிறது. பழைய ஏற்பாட்டில் அதுவரை, ஆசரிப்புக்கூடாரம் சம்பந்த மாகவே சொல்லப்படுகிறது (யாத் 40:21); இஸ்ரவேலர் சீனாயிலிருந்து புறப் பட்டது (எண் 10:33-36;), கானானைப் பிடிக்கிற முயற்சியில் தோற்றது (எண் 14:44) போன்ற சம்பவங்களில் அதைக் காணலாம். அது இஸ்ரவேலின் ஆசரிப் புக்கூடாரத்தின் மிகவும் பரிசுத்தமான ஒரு பொருள், தேவனுடன் இஸ்ரவேலருக் கிருந்த விசேஷித்த உறவை வெளிப்படுத்துகிற மூன்று பொருட்கள் அதனுள் இருந் தன: 1) பத்துக்கற்பனைகள் அடங்கிய கற்பலகைகள்; 2) பிரதான ஆசாரியனா கிய ஆரோனின் கோல்; 3) மன்னா அடங்கிய கலசம். யாத் 16:33; எபி 9:4.

அவர்கள் தங்கள் சொந்தப் பாணியிலும், தாங்கள் தீர்மானித்த நேரத்திலும் கானானுக்குள் நுழையவில்லை என்பதை உடன்படிக்கை பெட்டியும், யோர்தா னைக் கடப்பதற்கான ஆயத்தமும் இஸ்ரவேலருக்கு ஞாபகப்படுத்தின. தேவனு டைய வழியையும், நேரத்தையும் பின்பற்றினால் மட்டுமே அவர்கள் அத்தேசத் தைப் பிடிப்பது வெற்றிகரமாக அமையும். உடன்படிக்கை பெட்டியை மூடியபடி நின்ற கேரூபின்களுக்குமேல் தேவனுடைய சிங்காசனம் இருந்தது (யாத் 25:22, எண் 7:89); எனவே உடன்படிக்கை பெட்டி செல்கிற இடமெங்கும் தேவனும் சென்றார்; கானானைக் கைப்பற்றுவதில் அவரே இஸ்ரவேலர்களுக்கு முன்பாக வழிநடத்திச் சென்றது தெரிகிறது.

யோசுவா 3:5இல் வருகிற 'பரிசுத்தம்பண்ணுதல்' என்கிற வார்த்தை, ஆச ரிப்புக்கூடாரத்தில் ஊழியத்தைத் துவக்குவதற்குமுன் ஆசாரியர்கள் செய்த (யாத் 28:41; யாத் 29:1), சீனாயில் தேவன் தம்மை வெளிப்படுத்துவதற்குமுன் இஸ்ர வேலர் செய்த (யாத் 19:10,14) செயல்முறை போன்றது. அப்போது அவர்கள் பாவங்களை அறிக்கையிட்டு, சடங்காச்சார தீட்டுகள் யாவையும் தங்களைவிட்டு அகற்றினார்கள். தேவன் அற்புதம் செய்யவிருந்த ஒவ்வொரு சம்பவத்தின் போதும் அவர்களைப் பரிசுத்தம்பண்ணச் சொன்னார். எண் 11:18. யுத்தசமயங் களில் போருக்குச் செல்வதற்கு முன்னரும் அவர்கள் தங்களைப் பரிசுத்தம்பண்ண வேண்டியிருந்தது. உபா 23:14. தேவன் இஸ்ரவேலருக்காக யுத்தம் செய்வதற்கு முன் தேவன்மீது தங்களுக்குப் பற்றிருந்ததையும், அவரை தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டதையும் அவர்கள் காண்பிக்க வேண்டியிருந்தது.

கானானின் குடிகளை அங்கிருந்து துரத்துவதாக தேவன் கொடுத்த வாக்கு றுதியை நம்பலாம் என்பதற்கு யோர்தானை அற்புதமாகக் கடந்த அனுபவம் ஆதாரமாக இருந்தது. யோர்தானை வற்றச்செய்து கடந்துபோகச் செய்யக்கூடிய வரால், அத்தேசத்தை ஓர் ஈவாகவும் அவர்களுக்குக் கொடுக்கமுடியும்.

---

**தேவன் எப்போதும் யோர்தானை இரண்டாகப் பிரிப்பதில்லை; அவரது தலையீடுகள் எப்போதும் கண்கூடாகத் தெரிவதில்லை. ஆனாலும் நம் சார்பாக அவர் தலையிடுவதை அனுபவித்து, பகுத்தறிவதற்கான ஆவிக்குரிய ஆயத்தநிலையை எவ்வாறு உருவாக்கலாம்?**

# அற்புதம்செய்கிற ஜீவனுள்ள தேவன்

**யோர்தானைக் கடந்த அற்புதமானது, நாம் எப்படிப்பட்ட தேவனைச் சேவிப்பதைக் காட்டுகிறது? யோசுவா 3:6-17.**

---

---

யோசுவா 3:5இல் வருகிற 'அற்புதங்கள்' என்பதற்கான எபிரெய வார்த்தை *நிப்லாவ்ட்*. தேவனுடைய தனித்துவமான, மகத்துவமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை இது குறிக்கிறது. சங் 72:18; 86:10. பின்னர், இந்தச் செயல்களைத் தியானித்துப் பார்த்த இஸ்ரவேலர்கள், கர்த்தரைத் துதித்தார்கள், சங் 9:1; தேசங்களுக்குள் அவரை அறிவித்தார்கள். சங் 96:3. எகிப்தின் வாதைகள், செங்கடலைக் கடத்தல், வனாந்தரத்தில் தேவ வழிநடத்துதல் போன்றவை அத்தகைய அற்புதங்களாகப் பார்க்கப்பட்டன. யாத் 3:20; மீகா 7:15; சங் 78:12-16.

உலகத்தைச் சிருஷ்டித்த தேவனை அவரது சிருஷ்டிப்பு ஒருபோதும் கட்டுப்படுத்தவோ முடக்கவோ முடியாது. அவரால் செய்யக்கூடாதது (அதிசயம்) ஒன்றுமே இல்லை. எரே 32:17. அவரது நாமமும் இயல்பும் அதிசயம். நியா 13:18. அவர் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவர்.

இரட்சிக்கக்கூடாத பிற தேசங்களின் தேவர்களுடன் ஒப்பிடும்போது, வேதாகமத்தின் 'ஜீவனுள்ள தேவன்', செயல்படுகிறவர், அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவர் தங்களுக்காக இடைபடுவார் என்று நம்பிக்கையோடு இருக்கலாம். சங் 96:5; ஏசா 44:8.

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுச் சென்ற பிறகு, இஸ்ரவேலரின் எதிர்காலம் பற்றி தரிசனமாக, நிப்லாவ்ட் என்கிற வார்த்தையிலிருந்து வந்த ஒரு வார்த்தையை சகரியா தீர்க்கதரிசி பயன்படுத்துகிறார். எருசேலம் முழுவதுமாகக் கட்டப்படும், நகரத்தின் வீதிகளில் முதியவர்கள் வீற்றிருப்பார்கள், சிறுவர்களும் சிறுமிகளும் அங்கே விளையாடுவார்கள் என்று தரிசனமாகக் கண்டார். அத்தேசத்திற்கு அழிவு உண்டாவதற்கான அறிகுறிகள் தெரிய, சந்தேகத்தோடு இருந்த குடிமக்களிடம் இவ்வாறு அறிவிக்கிறார்: 'சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அது இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும், என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இதோ, கிழக்குதேசத்திலும் தெற்கு தேசத்திலுமிருந்து என் ஜனங்களை நான் இரட்சித்து, அவர்களை அழைத்துக் கொண்டுவருவேன்; அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள்; அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள், நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' சக 8:6-8.

---

**உங்கள் வாழ்க்கையில் சாத்தியமற்றதுபோலத் தோன்றுகிற விஷயங்களில் தேவனை நீங்கள் நம்புவதற்கு லூக் 18:18-27இல் சீடர்களிடம் இயேசு சொன்ன வார்த்தைகள் எவ்வாறு உங்களை ஊக்குவிக்கின்றன?**

---

# ஞாபகமிருக்கட்டும்

**இஸ்ரவேலர்களிடம் தேவன் நினைவுச்சின்னம் ஒன்றை எழுப்பும்படி சொன்னது ஏன்? யோசுவா 4.**

---

அந்தக் கற்கள் ஓர் 'அடையாளமாக' இருக்கவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். அதற்கான எபிரெய வார்த்தை ஓட்; அதற்கு 'அதிசயம்' என்றும் அர்த்தமுண்டு; குறிப்பாக, எகிப்தின் வாதைகள் போன்று தேவன் செய்த அற்புதமான செயல்களைச் சுட்டிக்காட்டுகிற வார்த்தை (நாளைய பாடத்தைப் பாருங்கள்). யாத் 7:3; உபா 4:34. ஆழமான அல்லது புத்திக்கெட்டாத ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டுகிற வெளிப்புற 'அடையாளம்' அல்லது 'சின்னம்' என்றும் கூறலாம். உதாரணமாக வானவில்லானது உடன்படிக்கையின் ஓர் 'அடையாளம்'. ஆதி 9:12, 13. இஸ்ரவேலருடைய வீடுகளின் நிலைக்கால்கள் மற்றும் மேல்சட்டங்களில் தெளிக்கப்பட்ட இரத்தம் ஓர் 'அடையாளம்' யாத் 12:13. முக்கியமாக, ஓய்வுநாளானது சிருஷ்டிப்பு மற்றும் தேவனுடைய பரிசுத்தமாக்குகிற பிரசன்னத்தின் ஓர் 'அடையாளம்'. யாத் 31:13,17; எசே 20:12.

இங்கே அந்த அடையாளம், அவர்கள் அற்புதமாகக் கடந்துசென்ற அனுபவத்தை பின்சந்ததியாருக்கு நினைவூட்டுகிற ஓர் நினைவுச்சின்னமாகச் செயல்படுகிறது. 'நினைப்பூட்டும் அடையாளம்' என்பதற்கான எபிரெயச் சொல் ஷிக்கரோன்; இது ஷகார் என்கிற வார்த்தையிலிருந்து வருகிறது; சரியான ஒரு செயலை நினைத்துப் பார்ப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. உபா 5:15; 8:2. பிறர் விசாரிக்கிற வகையில் (யாத் 12:26,27; உபா 6:20-25) கல் நினைவுச் சின்னங்களையும் (ஆதி 28:18-22), சடங்குகளையும் உண்டாக்குவது பழைய ஏற்பாட்டில் பொதுவான ஒரு நடவடிக்கையாக இருந்தது. அந்த அற்புதங்களை மீண்டும் மீண்டும் செய்வதற்கு பதிலாக தம் மகத்தான செயல்களை மக்கள் நினைவுகூரவும், கேட்கிறவர்களுக்கு அவற்றை சரியாக எடுத்துக்கூறவும் தேவன் நினைவுச்சின்னங்களை எழுப்பச் சொன்னார்.

'இந்தக் கற்கள் ஏது?' என்று பின்சந்ததியார் கேள்வி எழுப்பும்போது, அது தனிப்பட்ட வகையில் தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு சந்ததியாரும் அந்தக் கற்களின் பொருளை தனிப்பட்ட வகையில் உணர்ந்து, செயல்பட வேண்டியிருந்தது. யெகோவாவின் மகத்துவமான கிரியைகளின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு சந்ததியாரும் தாங்களாகவே மீண்டும் கண்டுகொள்வதால் மட்டுமே அற்புதங்களைச் செய்கிற தேவன்மீதான விசுவாசத்தை உயிரோட்டமாக வைத்திருக்கமுடியும். அப்படிப்பட்ட ஒரு விசுவாசம், வேதாகம அடிப்படையிலான பாரம்பரியங்களுக்கு உண்மையுடன் வாழ்வதற்கும், உயிரற்ற மார்க்கப் பாரம்பரியங்களின்படி வாழ்வதற்கும் இடையே உள்ள முக்கிய வித்தியாசத்தைக் காட்டுகிறது. உயிரற்ற மார்க்கப் பாரம்பரியத்தில் அசல் விழுமியமும் வைராக்கியமும் இருக்காது. இறுதியில், வேதாகம அடிப்படையிலான விசுவாசத்தை நாம் நமக்கு சொந்தமாக்கவேண்டும். நமக்காக எவரும், ஏன் நம் மூதாதையர்கள்கூட விசுவாசிக்கமுடியாது.

---

**தேவனுடன் உங்களுடைய சொந்த அனுபவத்தில், அவர் உங்களுக்காகச் செய்ததை ஞாபகப்படுத்துகிற சில தனிப்பட்ட நினைவுச்சின்னங்கள் என்ன?**

# மறதி

**பின்வரும் வசனங்களின் வெளிச்சத்தில் யோசுவா 4:20-24ஐ வாசியுங்கள்: நியா 3:7; 8:34; சங் 78:11; உபா 8:2, 18; சங் 45:17. கர்த்தருடைய மகத்துவமான கிரியைகளை நினைவுகூருவது ஏன் முக்கியமானது?**

---

---

யோசுவா 4:23 இல் முதலாம் நபரிலிருந்து இரண்டாம் நபருக்கு பேச்சு மாறுகிறது. அதாவது, யோர்தானைக் கடந்த இஸ்ரவேலரிடம், 'உங்கள்' அனைவருக்கும் முன்பாக அது வற்றிப்போனதெனச் சொல்கிறார்கள். ஆனால் சிவந்த சமுத்திரம்பற்றிச் சொல்லும்போது 'எங்களுக்கு முன்பாக வற்றினது' என்று குறிப்பிடுகிறார்கள். இவர்கள், யாத்திரை அனுபவத்தைக் கண்டிருந்த முதல் சந்ததியைச்சேர்ந்தவர்கள். இரண்டு வெவ்வேறு சந்ததிகள் அனுபவித்த இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒரேவித முக்கியத்துவம் வாய்ந்தவை; இரண்டாவது சந்ததியார் தங்கள் பெற்றோரின் சாட்சியின்மூலம், யோர்தானைக் கடந்த அனுபவத்தில் அதே முக்கியத்துவத்தைக் கண்டுகொண்டார்கள்.

பொதுவாக, மறதி எல்லா மனிதர்களிடமும் காணப்படுகிற ஒரு தன்மை. ஆனாலும், ஆவிக்குரியரீதியில் மறதியாக இருப்பது, கொடிய விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

இன்றும்கூட, விசேஷித்த அழைப்பும், ஊழியமும் பெற்றவர்கள் என்கிற நம் அடையாளத்தைப் பாதுகாக்க, நாம் உருவான விதம், நம் அடையாளம், நாம் இருக்கிற நோக்கம் ஆகியவற்றை மறக்கவிடாமல் செய்கிற தருணங்களை உருவாக்கவேண்டும்; அப்போதுதான் நம் தனிப்பட்ட, சபை அளவிலான நினைவுத்திறன் மங்காமல் இருக்கும்.

**கிறிஸ்து நமக்காகச் செய்ததை நாம் எப்போதும் நினைவுகூரவேண்டியது ஏன்? 1 கொரி 11:24,25; யோவான் 14:26. இல்லையெனில், ஏதாவது பயனுண்டா?**

---

---

தேவனுடைய கடந்தகாலச் செயல்கள் மற்றும் வெளிப்பாடுகளின் வெளிச்சத்தில் நாம் செல்லவில்லையென்றால், எதிர்காலத்தில் நம் ஊழியத்தைச் செய்வதற்கான ஊக்கத்தை இழந்துவிடுவோம் என்று எலன் ஒய்ட் தெளிவாகப் புரிந்திருந்தார்: 'தேவன் நம்மை வழிநடத்தி வந்த விதத்தையும், கடந்தகாலத்தில் அவர் நமக்குப் போதித்தவற்றையும் நாம் மறக்காதவரையிலும், எதிர்காலம் குறித்து நாம் பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை'.[1]

[1] Ellen G. White, Life Sketches, p. 196.

---

**கடந்தகாலத்தில் தேவன் நம் வாழ்க்கையில் செய்தவற்றை நினைவுகூருவது முக்கியம் என்றாலும், அவருடன் அனுதின அனுபவத்தைப் பெறவேண்டியதும், அவரது அன்பு மற்றும் பிரசன்னத்தின் நிஜத்தை இப்போதே அனுபவிக்கவேண்டியதும் ஏன் முக்கியம்?**

# யோர்தானுக்கும் அப்பால்

*'கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்; ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்'. சங் 66:6.*

சிவந்த சமுத்திரத்தையும் யோர்தானையும் கடந்துசென்ற இரண்டு நிகழ்வுகளுமே, வேதாகம வரலாற்றில் ஒரு புதிய யுகத்தின் துவக்கமாக இருந்தன; இரண்டும் அடையாளங்களாக இருந்தன. பார்க்கவும்: சங் 66:6; 114:1-7; 2 இராஜா 2:6-15. இந்த இரண்டு நிகழ்வுகளையும் இணைத்து, அந்த அசல் நிகழ்வுகளுக்கும் அப்பால் அதில் பொதிந்திருந்த அர்த்தத்தைச் சொல்கிற வசனங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. சங் 66இல், யோர்தான் மற்றும் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த வரலாற்று உதாரணங்களை, தேவன் தன் வாழ்க்கையில் செய்த மீட்பின் செயல்களுடன் ஒப்பிட்டு சங்கீதக்காரன் பேசுகிறார். சங் 66:16-19.

சங் 114இலும், இந்த இரண்டு நிகழ்வுகளும் இணைத்துப் பேசப்படுகின்றன; இரண்டும் வெவ்வேறு காலங்களில் நடந்ததென்பது ஆசிரியருக்கு தெரியாது என்பதாலல்ல; இரண்டு நிகழ்வுகளும் ஒரே இறையியல் அர்த்தமுடையவை என்பதால் அவ்வாறு சொல்கிறார். இவ்வாறு, இரண்டு நிகழ்வுகளும் இஸ்ரவேலரின் அந்தஸ்து மாற்றத்தில் முக்கியப் பங்காற்றியவை; அதாவது அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், தேசமில்லாத நிலையிலிருந்து ஒரு தேசமாக உருவாவதற்கும் வழிநடத்தப்பட்டதைக் குறிக்கின்றன. இந்தச் சங்கீதங்களில், இந்த நிகழ்வுகளை தன் வாழ்வு நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைச் சுட்டிக்காட்ட தாவீது பயன்படுத்துகிறார்; அதாவது ஒடுக்குதல், உதவியற்ற நிலை, நிந்தை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு, நலன், இரட்சிப்பு, கண்ணியம் ஆகிய நிலைக்கு தான் சென்றதாகச் சொல்கிறார். எலியாவின் காலத்திலும், யோசுவா புத்தகத்தின் அதே அற்புதம் நடைபெற்றது, யோர்தானுக்கு அருகே எலியா எடுத்துக்கொள்ளப்படுகிறார். யோர்தானைக் கடந்த அனுபவம் எலியாவின் வாழ்க்கை அந்தஸ்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்கவிருந்தது; அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். எலிசாவின் வாழ்க்கையிலும் அங்கே மாற்றம் நிகழ்கிறது. தீர்க்கதரிசியின் உதவியாளராக இருந்தவர் (1இராஜா 19:21), தேசத்தின் தீர்க்கதரிசியாகிறார். 2இராஜா 2:22.

**புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் யோர்தான் நதியின் அடையாள அர்த்தம், ஆவிக்குரிய அர்த்தம்பற்றிக் குறிப்பிடுவது என்ன? மத் 3:16,17; மாற்கு 1:9.**

இஸ்ரவேல் வரலாற்றின் அதே பாணியில்தான் இயேசுவின் பூலோக ஊழியமும் அமைந்திருந்தது. இயேசுவும் இஸ்ரவேலின் பிரதிநிதியாக, 'சிவந்த சமுத்திரம்', 'யோர்தானின்' அனுபவங்களைக் கடந்துவருகிறார். குழந்தைகளைக் கொல்ல கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில் எகிப்திற்குச் சென்றவர் அங்கிருந்து வெளியே அழைக்கப்பட்டார். மத் 2:14-16. இஸ்ரவேலர்கள் 40 வருடங்களை வனாந்தரத்தில் கழித்ததுபோல, 40 நாட்கள் வனாந்தரத்தில் இருந்தார். மத் 4:2. தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து பொது ஊழியத்திற்கு மாறுவதன் அடையாளமாக யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றார். மத் 3:16,17; மாற்கு 1:9.

பிறகு, எபிரெயர் 3-4 அதிகாரங்கள், யோர்தானைக் கடந்த அனுபவத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றன, விசுவாசத்தின்மூலம் கிறிஸ்தவர்கள் அடைகிற 'கிருபையின் இளைப்பாறுதலுக்கு' கானானுக்குள் பிரவேசித்த நிகழ்வு முன்னடையாளமாக இருப்பதாகச் சொல்கிறது.

# மேலும் படிக்க:

'இஸ்ரவேலர்கள் கானானுக்குச் சென்ற பயணத்தை கவனமாக ஆராயுங்கள். யோர்தானைக் கடந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்வதற்குச் செய்த ஆயத்தத்தையும், கடந்துசென்றதையும் பதிவுசெய்கிற மூன்றாம், நான்காம் அதிகாரங்களை ஆராயுங்கள். கடந்தகால தம் மக்களுக்கு ஆண்டவர் கற்றுக்கொடுத்த பாடங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து, நம் இருதயத்திற்கும் சிந்தைக்கும் பயிற்சி கொடுப்பது அவசியம். அப்போது அவர்களுக்கு அவர் திட்டமிட்டிருந்ததுபோல நமக்கும், அவரது வார்த்தையின் போதனைகள் எப்போதும் சுவாரஸ்யமாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கும்'.[1]

'தேவனுடைய பண்டைய மக்களைவிட இன்றைய இஸ்ரவேலர் தேவனை மறந்து, விக்கிரகாராதனைக்குள் வழிநடத்தப்படுகிற மிகப்பெரிய ஆபத்தில் இருக்கிறார்கள். ஓய்வுநாளைக் கைக்கொள்கிறவர்களெனச் சொல்பவர்கள்கூட, அநேக விக்கிரகங்களை வணங்குகிறார்கள். தம் பண்டைய மக்களிடம் குறிப்பாக விக்கிரகவழிபாடு செய்யக்கூடாதனெ தேவன் கட்டளையிட்டார்; ஏனென்றால், ஜீவனுள்ள தேவனைச் சேவிப்பதிலிருந்து விலகினால், தம்முடைய சாபம் அவர்கள்மீது வருமென்றும், அதே சமயம், முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழுப்பெலத்தோடும் அவர்கள் தம்மீது அன்புகூர்ந்தால், அவர்களது கூடையும் களஞ்சியமும் பரிபூரணமாக ஆசீர்வதிக்கப்படுமென்றும், வியாதி அவர்கள் நடுவிலிருந்து நீக்கப்படுமென்றும் கூறினார்'.[2]

[1] Ellen G. White, The Desire of Ages, pp. 390, 391.
[2] Ellen G. White, Testimonies for the Church, vol. 1, p. 609.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *யோர்தானை அற்புதமாகக் கடந்த அனுபவம்பற்றி வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அற்புதங்கள் என்றால் என்ன? இன்று தேவன் அற்புதங்கள் செய்வதுபோலத் தோன்றாதது ஏன்?*

2. *தனிநபர்களாகவும் ஒரு சபையாகவும் ஆவிக்குரிய மறதியைத் தவிர்ப்பதற்கு எந்தெந்த நடைமுறை வழிகளை வகுப்பில் பரிந்துரைக்கலாம்? தேவனுடன் நமக்குச் செயல்படுகிற உறவுவேண்டும், நம் முழு கிறிஸ்தவ அனுபவத்தையும் கடந்தகால மகத்தான அனுபவங்களின்மீது கட்டக்கூடாது என்பது முக்கியம் என்றாலும், தேவன் நம் வாழ்க்கையில் செயல்பட்டதை நினைவுகூருவதற்கு நம் கடந்த கால அனுபவங்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?*

3. *ஓய்வுநாள் எவ்வாறு தேவன் நம் வாழ்க்கையில் தலையிடுவதை நமக்கு நினைவூட்டுவதாகவும், அதேசமயம், அவரது ராஜ்யத்தில் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள இளைப்பாறுதலை முன்னரே அனுபவிக்கச் செய்வதாகவும் இருக்கிறது? நாம் நினைவுகூரவேண்டியதை மட்டுமல்ல, எதிர்காலத்தில் நாம் என்ன எதிர்பார்க்கலாம் என்பதையும் ஓய்வுநாள் எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது?*

# வியர்வை உடுப்புகளும் கண்ணீரும்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னி**

வியர்வை உடுப்புகள் சிதறிக்கிடக்க, அதை எடுத்துக்கொண்டு ஆட்கள் ஓடுவதை அந்த இருட்டின் மங்கலான வெளிச்சத்தில் பார்த்த ஸிட்ஸி சோண்டாவுக்கு அழுகை வந்தது.

தென் ஆப்ரிக்காவிலிருந்து அந்த உடுப்புகளை வாங்கி, ஜிம்பாப்வேக்குக் கொண்டு வந்தபோது இப்படி நடந்தது. கடன் வாங்கிதான் சரக்கு வாங்கியிருந்தார்; இப்போது கடனை திரும்பச் செலுத்த இயலவில்லை. ஒன்றுமே இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார். கண்ணீர் வந்தது. இனி தன் குழந்தைகளை எவ்வாறு கவனிப்பது?

'ஆண்டவரே, ஏற்கனவே என் வியாபாரம் நஷ்டமாகச் சென்றுகொண்டிருக்கிறது. இந்நிலையில் இப்படி வேறு நடந்துவிட்டது. என் பொருள் மட்டும்தான் நஷ்டமடைந்தது' என்று ஜெபித்தார்.

60 வியர்வை உடுப்புகளை ஒரு பெரிய பையில் வைத்து, தென் ஆப்ரிக்காவின் எல்லைப் பகுதியிலிருந்து கிளம்பின ஒரு சிறு பேருந்தின் மேல்பகுதியில் ஏற்றி, ஜிம்பாப்வேயின் புலா வாயோ நகரத்திற்கு வந்துகொண்டிருந்தார். ஆனால் பாதி தூரம் வந்தபோது, பேருந்து பயணி ஒருவர் இறங்கி விட்டதால், அவரைத் தேடுவதற்காக பேருந்தின் மேல்பகுதியிலிருந்த எல்லா பைகளையும் ஓட்டுனர் திறந்துபார்த்தார். ஆனால் ஸிட்ஸியின் பையைமட்டும் திரும்ப மூட மறந்துவிட்டார். பேருந்து தொடர்ந்து சற்று தூரம் சென்ற நிலையில், ஒரு காரின் சைகை ஒளியைக் கண்டு ஓட்டுனர் பேருந்தை நிறுத்தினார். பேருந்து புறப்பட்ட இடத்திலிருந்து வியர்வை உடுப்புகள் ஒவ்வொன்றாகப் பறந்துகொண்டிருப்பதாக அந்தக் காரின் ஓட்டுனர் சொன்னார். ஸிட்ஸி தன் பையைப் பார்த்தபோது 10 வியர்வை உடுப்புகள்மட்டுமே இருந்தன.

தவறு தன் மீதுதான் என்று ஓட்டுனர் உணர்ந்தபோதிலும், "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு இழப்பீடு வழங்க என்னிடம் பணம் இல்லை" என்று சொன்னார்.

ஜெபித்துவிட்டு, ஸிட்ஸி கண்ணீரைத் துடைத்துக்கொண்டார். தென் ஆப்ரிக்காவி லிருந்து இறக்குமதி செய்கிற பொருட்களிலிருந்து கிடைக்கிற லாபத்தில் ஸிட்ஸி தசமபாகம் வைத்துவிடுவார். எனவே, தேவன் தன்னைப் பார்த்துக்கொள்வார் என்று நம்பினார்.

புலாவாயோவில், ஸிட்ஸியின் சம்பவத்தைக் கேட்ட நண்பர்கள் அவருக்காக ஜெபித் தார்கள். இன்னொருவர், அவர் மீண்டும் தென் ஆப்ரிக்கா சென்று பொருட்கள் வாங்குவ தற்கு கடனுதவி செய்ய முன்வந்தார்.

தன் ஜெபத்திற்குக் கிடைத்த பதிலாக ஸிட்ஸி அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் தென் ஆப்ரிக்கா சென்றார். புதிதாக வியர்வை உடுப்புகள் வாங்கி, தன்னிடம் ஆர்டர் கொடுத்திருந்தவர்களுக்கு அவற்றைக் கொடுத்தார். இவ்வாறு நான்குமுறை தென் ஆப்ரிக்கா சென்று வந்த பிறகுதான், தான் இரண்டு பேரிடம் வாங்கியிருந்த கடனை அடைக்கமுடிந்தது. ஆனால் அந்தச் சமயங்களில், உணவுக்கும் வீட்டுச் செலவுகளுக்கும் அவருக்கு கஷ்டமே ஏற்படவில்லை.



"நான் அனைத்தையும் இழந்த சமயத்தில்கூட, நானும் என் குடும்பத்தினரும் பட்டினி கிடக்கவில்லை. ஒழுங்காக தசமபாகமும் காணிக்கையும் கொடுத்தால், தேவன் எப்போதும் உங்கள் தேவைகளைச் சந்திப்பார்" என்று சொன்னார்.